**பிப்ரவரி – 27**

# TNPSC துளிகள்

- இந்திய அரசாங்கத்திற்கு கடந்தப் பத்து ஆண்டுகளில் வாகனப் பாதுகாப்பு குறித்தத் தரங்களை மேம்படுத்தவதில் மேற்கொண்ட முயற்சிகளுக்காக, இந்தத் துறையின் மிக உயரிய விருதான 2025 ஆம் ஆண்டு பிரின்ஸ் மைக்கேல் தசாப்த சாலைப் பாதுகாப்பு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.
- 2024-25 ஆம் ஆண்டு சுழற்சிக்கான யுனெஸ்கோ அமைப்பின் உலகப் பாரம்பரிய தளப் பட்டியலில் சேர்ப்பதற்காக வேண்டி மராத்திய ஆட்சியாளர்களால் உருவாக்கப்பட்ட அசாதாரண கோட்டை மற்றும் இராணுவ அமைப்பைக் குறிக்கும் 'மராத்திய இராணுவ நிலப்பரப்புகளை' இந்தியா பரிந்துரைத்துள்ளது.
- இந்தியக் கடலோரக் காவல்படையானது, மேற்கு வங்காளத்தின் கடற்கரையில் 'சாகர் கவாச்' பயிற்சியை மேற்கொண்டது.
- ஐக்கியப் பேரரசிற்கும் இந்தியாவிற்கும் இடையிலான வணிக உறவுகளை மிக நன்கு மேம்படுத்தியதற்காக என்று பாரதி எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் தலைவர் சுனில் பாரதி மிட்டல் கௌரவ வீரத் திருத்தகை (நைட்ஹூட்) பதக்கத்தைப் பெற்றுள்ளார்.
- மத்தியப் பிரதேசத்தின் குனோ தேசியப் பூங்காவில் (KNP) கூண்டில் வைக்கப்பட்டு பின் பாதுகாக்கப்பட்ட மேலும் ஐந்து சிவிங்கிப் புலிகள் "காட்டிற்குள்" விடப் பட்டன என்ற நிலையில் இதன் மூலம் தற்போது அங்கு காட்டில் விடுவிக்கப்பட்டுள்ள பெரும்பூனை இனங்களின் மொத்த எண்ணிக்கை 12 ஆக உயர்ந்துள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்

## தமிழ்நாட்டில் இரு மொழிக் கொள்கை




- பிரதான் மந்திரி எழுச்சி பெறும் இந்தியாவிற்கான பள்ளிகள் (PMSHRI) முன்னெடுப்பில் இணைய மறுத்ததற்காக, சமக்ர சிக்சா என்ற திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய 2,152 கோடி ரூபாய் நிதியை மத்திய அரசு நிறுத்தி வைத்துள்ளது.
- ஆனால் PM SHRI திட்டம் ஆனது, 2020 ஆம் ஆண்டு தேசியக் கல்விக் கொள்கையை (NEP)

செயல்படுத்துவதுடன் இணைந்ததாகும்.

- NEP கொள்கையில் மாநில அரசின் சில முக்கிய ஆட்சேபனைகளில் ஒன்று பள்ளிகளில் மும்மொழி கொள்கையினை ஏற்றுக் கொள்வதை வலியுறுத்தும் அத்திட்டத்தின் ஒரு அம்சமாகும்.
- 1968 ஆம் ஆண்டு NEP கல்விக் கொள்கையில் முதன்முதலில் அறிமுகப்படுத்தப்பட்ட மும்மொழி கொள்கை கருத்தாக்கமானது 2020 ஆம் ஆண்டு NEP கொள்கையிலும் தக்க வைக்கப்பட்டுள்ளது.
- 1968 ஆம் ஆண்டு NEP கொள்கையானது, இந்தி மொழியானது நாடு முழுவதும் கட்டாய மொழியாக இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டது.
- இந்தி மொழி பேசும் இந்திய மாநிலங்கள் இந்தி, ஆங்கிலம் மற்றும் ஒரு நவீன இந்திய மொழியை, பெரும்பாலும் தென்னிந்திய மொழியை கற்பிக்க வேண்டியிருந்தது, அதே நேரத்தில் இந்தி மொழி பேசாத மாநிலங்கள் உள்ளூர் பிராந்திய மொழி, இந்தி மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளைக் கற்பிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது.
- இதற்கு நேர்மாறாக, NEP 2020 கொள்கையானது எந்த மாநிலத்தின் மீதும் எந்த ஒரு குறிப்பிட்ட மொழியையும் திணிக்காத வகையில் அதிக தகவமைப்பினைக் கொண்டு உள்ளது.
- 1937 ஆம் ஆண்டில், சென்னையில் ஆட்சி செய்த C. இராஜகோபாலாச்சாரி (இராஜாஜி) அவர்களின் அரசாங்கமானது, மேல்நிலைப் பள்ளிகளில் இந்தி மொழியைக் கட்டாயப் பாடமாக்க முன்மொழிந்த போது, நீதிக் கட்சி அதை கடுமையாக எதிர்த்தது.
- 1965 ஆம் ஆண்டில், இந்தியா முழுவதும் இந்தி மொழியை முதன்மை/ஒரே அலுவல் மொழியாக ஏற்றுக் கொள்வதற்கான காலக்கெடு நெருங்கியபோது, தமிழக மாநிலம் ஆனது வன்முறை மிக்க எதிர்ப்புகளை வெளிப்படுத்தியது.
- மும்மொழிக் கொள்கையின் ஒரு பகுதியாக இந்தி மொழியினைக் கற்பிப்பதை ஒரு கட்டாயமாக்கிய அலுவல் மொழிகள் (திருத்தம்) சட்டம், 1967 மற்றும் அலுவல் மொழித் தீர்மானம், 1968 ஆகியவற்றை பாராளுமன்றம் ஏற்றுக் கொண்ட போது மீண்டும் போராட்டம் வெடித்தது.
- 1968 ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் தேதியன்று, C.N. அண்ணாதுரை தலைமையிலான முதல் அரசாங்கத்தின் தலைமையிலான சென்னை சட்டமன்றம் ஆனது, மும்மொழிக் கொள்கையினை ரத்து செய்ய வேண்டும் என்றும், தமிழ்நாடு பள்ளிகளில் உள்ள பாடத் திட்டத்திலிருந்து இந்தி மொழியை நீக்க வேண்டும் என்றும் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது.
- அப்போதிலிருந்து, தமிழ் மற்றும் ஆங்கில மொழியைக் கற்பிக்கும் வகையில் இரு மொழிக் கொள்கையை தமிழக மாநிலம் உறுதியாகப் பின்பற்றி வருகிறது.
- 2019 ஆம் ஆண்டில், கஸ்தூரிரங்கன் குழு ஆனது தேசியக் கல்விக் கொள்கை வரைவில் இருந்து கட்டாய இந்தி மொழிக் கற்றல் பிரிவை நீக்குவதற்கு வழி வகுத்தது.
- 2019 ஆம் ஆண்டில், இந்தி மொழி பேசாத மாநிலங்களில் இந்தி மொழி ஆசிரியர்களை நியமிப்பதற்கு நிதி ஆதரவினை வழங்குவதற்காக மத்திய நிதிநிலை அறிக்கையில் 50 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கியது.

## ஐந்தாவது காவல் ஆணையப் பரிந்துரைகள்

- ஐந்தாவது தமிழ்நாடு மாநிலக் காவல் ஆணையம் ஆனது, மத்திய அரசு மற்றும் பிற மாநிலங்களில் உள்ள காவலர்களுக்கு, அவர்களின் சகாக்களுக்கு இணையான ஊதிய உயர்வை வழங்குவதற்குப் பரிந்துரைத்துள்ளது.
- இதன்படி வாழ்க்கைச் செலவினக் குறியீட்டிற்கு ஏற்ப கொடுப்பனவுகள் அவ்வப்போது

மாறுபடலாம்.

- காவலர்களுக்கான குறைந்தபட்ச கல்வித் தகுதியை '10 ஆம் வகுப்பு தேர்ச்சி' என்பதில் இருந்து '+2 தேர்ச்சி' அல்லது அதற்கு இணையானதாக உயர்த்த ஆணையம் பரிந்துரை செய்துள்ளது.
- அவர்களின் மனநலத்தை மேம்படுத்துவதற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்றும் பரிந்துரைத்துள்ளது.
- பெங்களூருவின் NIMHANS நிறுவனத்துடன் இணைந்து, அவ்வப்போது காவலர் நலம் பேணல் திட்டத்தினைத் தொடருமாறு வலுவாகப் பரிந்துரைத்துள்ளது.
- தொடர் கண்காணிப்பு, உளவியல் ஆலோசனை மற்றும் மனநல நிபுணர்களிடம் சிகிச்சை பெற பரிந்துரைப்பதற்காக, தொடர் புகைப்பிடிப்புப் பழக்கமுடையவர்கள் மற்றும் மது அல்லது போதைப்பொருள் பழக்கம் உள்ளவர்களை அடையாளம் காண வேண்டும்.
- தமிழக மாநில அரசானது, 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில், சென்னை உயர் நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி C.T. செல்வம் அவர்கள் தலைமையில் ஐந்தாவது காவல் ஆணையத்தினை அமைத்தது.
- இதில் ஓய்வு பெற்ற இந்திய ஆட்சிப் பணி அதிகாரி K. அலாவுதீன், ஓய்வு பெற்ற இந்தியக் காவல் பணி அதிகாரி K. ராதாகிருஷ்ணன், பிரபல மனநல மருத்துவரான டாக்டர் C. இராமசுப்பிரமணியம் மற்றும் ஓய்வு பெற்றப் பேராசிரியர் நளினி ராவ் ஆகியோர் உறுப்பினர்களாக இருந்தனர்.





# தேசியச் செய்திகள்

## திறன் குறியீடு 2025

- இந்தியாவின் பட்டதாரிகளின் திறன் குறியீடு 2025 என்ற புதிய அறிக்கையை மெர்சர் - மெட்ல் என்ற நிறுவனம் வெளியிட்டுள்ளது.
- இதன்படி இந்தியப் பட்டதாரிகளில் 42.6 சதவீதம் பேர் மட்டுமே வேலைவாய்ப்பிற்குத் தகுதியானவர்கள் என்று இந்த அறிக்கை கூறுகிறது.
- இது 2023 ஆம் ஆண்டில் பதிவான சுமார் 44.3 சதவீதத்திலிருந்துப் பதிவாகியுள்ள ஒரு சரிவைக் குறிக்கிறது.
- நிறுவனங்களின் திறன்சார் தேவைகளுக்கும் பட்டதாரிகளிடம் உள்ள திறன்களுக்கும் இடையிலான இடைவெளி அதிகரிப்பதே மிகப்பெரிய சவாலாக உள்ளது.

- முதல் நிலைக் கல்லூரிகளில் இருந்து பட்டம் பெற்றவர்கள் 48.4 சதவீதத்தில் அதிக வேலை வாய்ப்புத் திறனைக் கொண்டுள்ளனர். அதைத் தொடர்ந்து இரண்டாம் நிலை (46.1 சதவீதம்) கல்லூரிகளும் மற்றும் மூன்றாம் நிலைக் கல்லூரிகளும் (43.4 சதவீதம்) உள்ளன.
- மாநிலங்களில், டெல்லி (53.4 சதவீதம்), இமாச்சலப் பிரதேசம் (51.1 சதவீதம்) மற்றும் பஞ்சாப் (51.1 சதவீதம்) ஆகியவை அதிக வேலைவாய்ப்புத் தகுதியுள்ள பட்டதாரிகளை உருவாக்குகின்றன.
- இந்தியப் பட்டதாரிகளில் சுமார் 46 சதவீதம் பேர் தற்போது செயற்கை நுண்ணறிவு & இயந்திரக் கற்றல் சார்ந்த பணிகளில் பணி புரியத் தகுதியானவர்கள் என்பதோடு இது 2023 ஆம் ஆண்டு முதல் குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் குறிக்கிறது.




# சர்வதேசச் செய்திகள்


## டோன்கின் வளைகுடா அடிப்படை எல்லை வரையறை




- வியட்நாமின் வெளியுறவு அமைச்சகம் ஆனது, டோன்கின் வளைகுடாவில், சீனாவுடன் கடல் சார் எல்லையைப் பகிர்ந்து கொள்கின்ற அதன் அடிப்படை உரிமைக் கோரலை வரையறுக்கும் வரைபடத்தினை வெளியிட்டுள்ளது.
- இது பிராந்திய நீர்நிலைகள் மற்றும் பிரத்தியேக பொருளாதார மண்டலங்களுக்கான வரம்புகளை தீர்மானிக்க அடிப்படை எல்லைக் கோடுகள் பயன்படுத்தப்படுகின்றது.

- ❖ தென் சீனக் கடலில், சீனா, வியட்நாம் மற்றும் பிராந்தியத்தில் உள்ள பிற நாடுகள் சில முரண்பட்ட உரிமைகோரல்களைக் கொண்டுள்ளன.
- ❖ கடந்த ஆண்டு மார்ச் மாதம், இந்த டோன்கின் வளைகுடாவில் சீனா அதன் அடிப்படை எல்லையினை அறிவித்தது.

## FATF சந்திப்பு 2025





- ❖ ஐக்கியப் பேரரசினைச் சேர்ந்த கைல்ஸ் தாம்சன் FATF என்ற அமைப்பின் துணைத் தலைவராக (2025-2027) நியமிக்கப்பட்டுள்ளார்.
- ❖ நேபாளம் மற்றும் லாவோ மக்கள் ஜனநாயகக் குடியரசு ஆகியவை சாம்பல் நிறப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.
- ❖ நேபாளம் ஆனது, சாம்பல் நிறப் பட்டியலில் சேர்க்கப்படுவது இது இரண்டாவது முறை ஆகும்.
- ❖ நேபாளம் ஆனது 2008 முதல் 2014 ஆம் ஆண்டு வரையில் FATF அமைப்பின் சாம்பல் நிறப் பட்டியலில் இருந்தது.
- ❖ இவ்விதிமுறைகளின் இணக்கத்தில் ஏற்பட்ட முன்னேற்றம் காரணமாக பிலிப்பைன்ஸ் நாடானது சாம்பல் நிறப் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டது.
- ❖ கென்யா நாடானது, கேமன் தீவுகள் மற்றும் செனேகலுடன் சேர்த்து, guest என்ற ஒரு முன்னெடுப்பின் கீழ் FATF முழு நிறைவுக் குழுவில் இணைந்தது.

# பொருளாதாரச் செய்திகள்

## இந்தியாவின் LNG இறக்குமதிகள் 2024


- ❖ 2024 ஆம் ஆண்டில் அமெரிக்காவிலிருந்து இந்தியாவின் திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு (LNG) இறக்குமதி ஆனது 252.28 டிரில்லியன் கன அடி அளவில் உயர்ந்தது.
- ❖ இது தோராயமாக 7.14 பில்லியன் கன மீட்டர் (BCM) ஆகும்.
- ❖ முந்தையதாக மேற்கொள்ளப்பட்ட மிக அதிகபட்ச இறக்குமதி, 2021 ஆம் ஆண்டில் வட அமெரிக்க நாட்டிலிருந்து இந்தியா மேற்கொண்ட 5.56 BCM LNG இறக்குமதி ஆகும்.
- ❖ கத்தார் நாட்டிற்கு அடுத்தபடியாக, 2023 ஆம் ஆண்டில் இந்தியாவிற்கு LNG வழங்கும்

இரண்டாவது மிகப்பெரிய நாடாக அமெரிக்காவினை முந்தி ஐக்கிய அரபு அமீரகம் திகழ்ந்தது.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## மின்சாரப் பயன்பாட்டு 2025 அறிக்கை – IEA




- சர்வதேச எரிசக்தி முகமையானது (IEA), மிகச்சமீபத்தில் 2025 ஆம் ஆண்டு மின்சாரப் பயன்பாட்டு அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- உலகளாவிய எரிசக்தி தேவையானது, 2024 ஆம் ஆண்டில் சுமார் 4.3% அதிகரித்துள்ளது மற்றும் 2027 ஆம் ஆண்டு வரையில் 4 சதவீதத்தினை ஒட்டி தொடர்ந்து அதிகரிக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- சீனாவானது அமெரிக்கா அல்லது ஐரோப்பிய ஒன்றியத்தை முந்தி மின்சாரத்தை மிக அதிகமாகப் பயன்படுத்தும் நாடாக உருவெடுத்துள்ளது.
- 2024 ஆம் ஆண்டில் பதிவான சுமார் 1% அதிகரிப்பைத் தொடர்ந்து, 2025 முதல் 2027 ஆம்

ஆண்டு வரையில் மின்சார உற்பத்தியில் இருந்து வெளியாகும் ஒரு உலகளாவிய $CO_2$ உமிழ்வு ஆனது நிலைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

- 2025-2027 ஆம் காலக் கட்டத்திலிருந்து, மின்சாரத் தேவையின் அதிகரிப்பில் சுமார் 95% தேவையினை புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பூர்த்தி செய்யும்.
- இந்தியாவின் மின்சாரத் தேவையானது, 2024 ஆம் ஆண்டில் 5.8% அதிகரித்துள்ளது, மேலும் 2025-2027 ஆண்டு முதல் ஆண்டுதோறும் சராசரியாக 6.3% அதிகரிக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- இந்தியாவின் அணுசக்தி திறன் ஆனது 2024 ஆம் ஆண்டில் 13% அதிகரித்துள்ளது.
- 2032 ஆம் ஆண்டில் இந்தியாவின் அனல் மின் உற்பத்தித் திறன் சுமார் 283 GW ஆக அதிகரிக்கும்.
- 2024 ஆம் ஆண்டில் இந்தியாவின் மின் உற்பத்தி மூலங்களின் பங்கில் 74% பங்குடன் நிலக்கரி முன்னிலையில் செலுத்துகிறது.
- புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் பங்கு ஆனது, 21 சதவீதத்திலிருந்து (2024) 27% (2027) ஆக அதிகரிக்கும்.

# முக்கிய தினங்கள்

## சர்வதேச அஸ்பெர்கர் நோய்க்குறி தினம் - பிப்ரவரி 18





- ஆட்டிசம் ஸ்பெக்ட்ரம் எனப்படும் நரம்பியல் வளர்ச்சிக் குறைபாட்டின் ஒரு பகுதியாக இருக்கும் இந்த நிலை குறித்த ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்தத் தினத்தின் நோக்கமாகும்.
- இந்த பாதிப்பின் பண்புகளின் தொகுப்பை முதலில் விவரித்த ஆஸ்டிரியா நாட்டினைச் சேர்ந்த மருத்துவர் ஹான்ஸ் ஆஸ்பெர்கரின் பிறந்த நாளை முன்னிட்டு இந்த நாள் நிறுவப்பட்டது.
- இது ஆட்டிசம் ஸ்பெக்ட்ரம் கோளாறு (ASD) என்ற பாதிப்பின் கீழ் வரும் ஒரு நரம்பியல் வளர்ச்சி சார் குறைபாட்டு நிலையாகும்.
- அஸ்பெர்கர் நிலை கொண்டுள்ள நபர்கள் பெரும்பாலும் குறிப்பிட்ட தனித்துவமான பண்புகளைக் கொண்டுள்ளனர்.


- இந்தப் பாதிப்பு கொண்ட எந்த இரண்டு நபர்களுக்கும் ஒரே மாதிரியான அறிகுறிகள் இருப்பதில்லை.

## உலக அமைதி மற்றும் புரிதல் தினம் - பிப்ரவரி 23

- உலகளாவிய நல்லிணக்கத்தினை வளர்ப்பதில் பேச்சுவார்த்தை மற்றும் ஒரு பரஸ்பர மரியாதையின் முக்கியத்துவத்தை இத்தினம் எடுத்துரைக்கிறது.
- இந்த நாள் ஆனது ரோட்டரி இன்டர்நேஷனல் அமைப்பு உருவாக்கப்பட்டதன் ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.
- இன்று, ரோட்டரி இன்டர்நேஷனல் அமைப்பானது 200க்கும் மேற்பட்ட நாடுகள் மற்றும் பிராந்தியங்களில் உள்ள சுமார் 46,000 குழுக்களில் 1.4 மில்லியனுக்கும் அதிகமான உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.




## மத்திய கலால் வரி தினம் - பிப்ரவரி 24




- 1944 ஆம் ஆண்டில் இந்த நாளில் தான், மத்தியக் கலால் மற்றும் உப்புச் சட்டம் நிறுவப் பட்டு நடைமுறைக்கு வந்தது.
- இந்தச் சட்டம் ஆனது பின்னர் 1966 ஆம் ஆண்டில் மத்திய கலால் சட்டம், 1944 என மறு

பெயரிடப் பட்டது.

❖ சுங்க வரி விதிப்பு மற்றும் வசூல், மத்திய கலால் வரிகள், மத்திய சரக்கு மற்றும் சேவை வரி மற்றும் ஒருங்கிணைந்தச் சரக்கு மற்றும் சேவை வரி, கடத்தல் தடுப்பு மற்றும் சுங்கம் தொடர்பான நிர்வாகம் போன்றவற்றுக்கான கொள்கைகளை இந்த வாரியம் உருவாக்குகிறது.

## உலக அரசு சாரா நிறுவனம் தினம் - பிப்ரவரி 27

❖ இது உலகம் முழுவதும் உள்ள அரசு சாரா அமைப்புகள் (தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் - NGO) ஆற்றியப் பங்களிப்புகளைக் கொண்டாடுகிறது.

❖ இது 2010 ஆம் ஆண்டு ஏப்ரல் 17 ஆம் தேதியன்று லிதுவேனியாவின் வில்னியஸில் உள்ள பால்டிக் கடல் அரசு சாரா அமைப்பு மன்றத்தின் 12 நாடுகளால் அதிகாரப் பூர்வமாக முன்மொழியப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.

❖ 2014 ஆம் ஆண்டில், ஐரோப்பிய ஒன்றியம், ஐக்கிய நாடுகள் சபை மற்றும் பிற நாடுகள் இத்தினத்தினை உலக அளவில் அதிகாரப்பூர்வமாக அங்கீகரித்தன.

❖ 2025 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Empowering Grassroots Movements for a Sustainable Future" என்பதாகும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★